பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 13 வியாழக்கிழமை 28.07.2022 கதிர் 154

## பதும் கேர்ணர் கைது!



சமூகச்செயற்பாட டாளர்பதும்கேர்ணர் கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவினரால் கைதுசெய்யப்பட டுள்ளார்.

அண்மையில் பத்தரமுல்ல -பொல் துவ சந்தியில் ☞2

# துப்பாக்கிச் சூட்டால் அதிர்கின்றது தெற்கு; இரு நாள்களில் மாத்திரம் 5 பேர் கொலை!

இலங்கையில் கடந்த இரண்டு நாள்களில் நடத்தப்பட்ட நான்கு துப்பாக்கிச்சூட்டுச் சம் பவங்களில் 5 பேர் பலியானதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனடிப்படையில் நான்காவது துப்பாக்கிச்சூடு நேற்றிரவு இரத்மலானை -சில்வா மாவத்தைப் பகுதியில் நடத்தப்பட்டது.

ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்த இருவர் ஒட்டோ சாரதி மீது துப்பாக்கிச்சூடு நடத் தியுள்ளனர்.

சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 30 வயதான நபரே உயிரிழந்தார்.

எதற்காக இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டது என்பது தொடர்பில் இதுவரையில் தகவல் வெளியாகவில்லை.

இதேவேளை, அம்பலாங்கொடை ☞2



## சூழ்ச்சி மூலமே ராஜபக்ஷக்கள் விரட்டியடிப்பு

அடுத்த தேர்தலிலும் 'மொட்டுவே வெற்றி என்கிறார் சாகர எம்.பி.



சூழ்ச்சி மூலமே ராஜபக் ஷக்கள் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர் என்று தெரி வித்த சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செய லாளர் சாகர காரியவசம் எம். பி.,அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் சிறிலங்கா பொது ஜன முன்னணியே வெற்றி பெறும் என்றும் அடித் துக் கூறி னார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை யகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே ☞2

# நீதியை நிலைநாட்ட வேண்டும்!

### பிரதமர் தினேஷுடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதர் ஜூலி வலியுறுத்து



இலங்கைக்கான அமெ ரிக்கத் தூதுவர் ஜூலி சுங், புதிய பிரதமர் தினேஷ் குணவர்தனவை இன்று சந்தித்தார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இரண் டாவது தடவையாக நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்த அவர், ☞2

## பதுளை எரிபொருள் நிலைய வளாகத்திலும் துப்பாக்கிச்சூடு



பதுளை - பசறை பிரதான வீதியில் ஹிந்தகொட பகுதியில் அமைந்துள்ள ஐ.ஓ.சி.எரி பொருள் நிரப்பு நிலைய வளாகத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 12.05 மணியளவில் இடம்பெற் றுள்ளது எனப் பதுளைப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியருக்கும், வியாரகொட பகுதியைச் சேர்ந்த எரிபொரு ளைப் பெற்றுக்கொள்ள வந்த நபருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த் ☞2

# மக்கள் ஆணை பெற உடன் பொதுத்தேர்தல் வேண்டும்!

### - வலியுறுத்துகின்றார் தேசப்பிரிய

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர் தல் ஆகிய இரண்டிலும் மக்க ளால் வழங்கப்பட்ட ஆணை தோல்வியடைந்துள்ளதால், விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெற வேண்டும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களி டம் அவர் கருத்துத் தெரிவிக்கை யில், ☞2



## கோட்டாபய நியமித்த கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு கலைப்பு

இலங்கையில் கல்வி மேம் பாடு, விரிவாக்கம் மற்றும் நவீன மயப்படுத்தலுக்கான பரிந்துரைகளுக்கென முன் னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகை யில் கலைக்கப்படுவதாக அறி விக்கப்பட்டுள்ளது.

கல்விக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் கே. ஆர். பத்மப்பிரிய ☞2

## அவசரகாலச் சட்டத்தை சபையில் எதிர்த்தது ஏன்?

### - பீரிஸ் விளக்கம்



அவசரகாலச் சட்டம் என்பது நாட்டுக்கு அவசியம். அதனை அமுலாக்கும்போது தூரநோக்கு சிந்தனை இருக்க வேண்டும். எனினும், தற்போதைய சூழ்நிலையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட் டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடி யாத செயலாகும்.

- இவ்வாறு சிறிலங்கா பொது ஜன முன்னணியின் தவிசாளர் சட்டத்துறை ☞2




## இஸ்மத் மௌலவியும் கைது!

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின ரால் இஸ்மத் மௌலவி இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்துக்கு முன்னால் போராட்டம் ☞2



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## கோட்டாபய........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2019 ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜக்ஷ், அரசமைப்பின் 33ஆவது உறுப்புரைக்கமைவாக ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தின் படி, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி, 2169/2 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கையில் கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவை ஸ்தாபித்தார்.

ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் மேற்கொள்ளப்பட வேண்டிய விரிவாக்கல்நடவடிக்கைகள் மற்றும் கல்வியை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்குவதும், காலத்துக்குக்காலம் கல்வி முன்னேற்றம் பற்றி அறிக்கைகளை வழங்குவதும் இந்த ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

இலங்கையின் மூத்த துறைசார் நிபுணர்கள், கல்வியியலாளர்கள், அனைத்துப்பல்கலைக்கழகங்களினது துணைவேந்தர்கள்மற்றும்உயர்கல்வி நிறுவனங்களின் பணிப்பாளர்கள் உட்பட 31 பேர் ஸ்தாபக உறுப்பினர்களாக நியமக்கப்பட்டிருந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைஅடுத்துஇந்தஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளதாக 27.07.2022 ஆம் திகதியக் கடிதம் மூலம் தனக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று கல்வி நடவடிக்கைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் குறப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஆட்சி மாற்றத்தின் பின், முன்னாள் ஜனாதிபதியினால் நியமனம் வழங்கப்பட்ட கூட்டுத் தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் ஆணைக்குழுக்களின் உயர் பதவிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்று அரச உயர்மட்டத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## துப்பாக்கிச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- கலகொட பகுதியில் நேற்று மாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் பலியாகினர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான வர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு மற்றொருவர் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, அம்பலாங்கொட - ஊரவத்த பகுதியில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த நபர் பலப்பிட்டிய மேல்நீதிமன்றில் வழக்கொன்றுக்காக முன்னிலையாகி மீள வீடு திரும்பிய சந்தர்ப்பத்தில் இவ்வாறு கொல்லப்பட்டார்.

இந்தநிலையில் குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கும் நேற்றைய துப்பாக்கி சூட்டுக்கும் தொடர்பு உள்ளதா? என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கம்பஹா நீதிமன்றுக்கு முன்பாக நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பாதாள உலகக் குழு உறுப்பினரான 'பஸ் பொட்டா' எனப்படும் சமன் ரோஹித பெரேரா உயிரிழந்தார்.

கம்பஹா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அவர் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கம்பஹா நீதிமன்றுக்கு முன்பாக நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் பாதாள உலகக் குழுவின் உறுப்பினரான 'பஸ் பொட்டா' என்ற சமன் ரோஹித பெரேரா உள்ளிட்ட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த நால்வரும் நேற்று மதியம் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகி கப் ரக வாகனம் ஒன்றில் திரும்பிச் செல்ல முற்பட்டபோது இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது

## பதும் கேர்னர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பான விசாரணைகளுக்காகக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வருகை தந்திருந்தபோதே அவர் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்புகுற்றத்தடுப்புப்பிரிவுக்குள் நுழைவதற்கு முன்னர் அவர் சமூக ஊடகங்களில் நேரலை காணொளி ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

## பதுளை எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகராறி னால், எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வந்த நபர் 9 மி.மி. ரகத் துப்பாக்கியால் வானத்தை நோக்கி நான்கு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

எவருக்கும் எந்தவிதமான காயங்கள் ஏற்படாத போதிலும் சந்தேகநபரைக் கைதுசெய்யும் வகையில் விசாரணைகளைப் பதுளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்கள் ஆணை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்துக்காக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், செலவு செய்வதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை அதற்குக் உதாரணம்.

தேர்தலை நடத்த ஆயிரத்து 200 கோடி ரூபாய்களே செலவாகும். இத் தொகையை 600 கோடிகளாகச் சுருக்கித் தேர்தலை நடத்தவும் முடியும்.

எந்தவொரு கொடுப்பனவையும் பெறாமல் தேர்தல் கடமையைச் செய்யத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர் - என்றார்.

## சூழ்ச்சி மூலமே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரி விக்கையில்,

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையர். அவர் நிச்சயம் நாடு திரும்புவார். சூழ்ச்சி மூலமே எமது தலைவர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர். இந்த உண்மையை மக்கள் புரிய ஆரம்பித்துள்ளனர் .எதிர்காலத்தில் ஆதாரங்களுடன் அவை நிரூபணமாகும்.

அடுத்த தேர்தலிலும் எமது கட்சிக்கே பெரும்பான்மை பலம் கிடைக்கும் - என்றார்.

## அவசரகால .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் அவசர காலச் சட்டம் அவசியமில்லை என்பதாலேயே நாடாளுமன்றத்தில் அதற்கு எதிராக வாக்களித்தேன். அந்தச் சட்டம் வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் - என்றும் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

## இஸ்மத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியமை, பொதுச்சொத்துக் களுக்குச் சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

## நீதியை........

இன்று புதிய பிரதமரையும் சந்தித்தார்.

இந்தச் சவாலான காலகட்டத்தில் இலங்கை மக்களுக்கு அமெரிக்கா எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என்பது குறித்து புதிய பிரதமருடன் கலந்துரையாடியதாக அமெரிக்கத் தூதுவர் இந்தச் சந்திப்பு குறித்து ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் உட்பட பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் மீளக் கட்டியெழுப்புவதற்கும் உழைக்கும்போது, நாட்டின் தலைவர் ஒருவர் சட்டம் மற்றும் நீதியின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகளை அணுகுவது கட்டாயமாகும் என்று அவர் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் அவர் கூறியுள்ளார்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## இவ்வளவு பின்னடைவு ஏன்?

கடந்த வாரம் புதனன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவின் போது ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்தி டலஸ் அழகப்பெருமவைக் கொண்டுவர முயற்சித்த தரப்புகளின் உண்மை முகம் அடுத்த வாரத்துக்குள் – நேற்றைய அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பின்போது – அம்பலமாகிவிட்டது எனலாம்.

டலஸ் அழகப்பெருமவுடன் ஜனாதிபதித் தெரிவின் போது அணி சேர்ந்த விமல் வீரவன்ஸ மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த நான்கு எம்.பிக்கள், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எஸ்.எம்.அதாவுல்லா, அசங்க நவரத்தின, பிரேம்நாத் சி.தொலவத்த ஆகியோர் ரணில் அரசு கொண்டு வந்த அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

அதேவேளை, ஜனாதிபதி தெரிவின் போது டலஸ் அழகப்பெருமவுடன் அணி சேர்ந்தவர்கள் என கூறப்படும் வண. அத்துரலியரத்தின தேரர், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, கம்யூனிஸ்ட் கட்சியின் வீரசுமன வீரசிங்க, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண, கொவிந்து குமாரதுங்க, பிவித்ரு ஹெலஉறுமயவின் உதய கம்மன்பில ஆகியோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியும், அத்தரப்பின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட டலஸ் அழகப்பெருமவும் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கும் முடிவைத் தீர்க்கமாக எடுத்து, அதனை நாடாளுமன்ற உரைகளில் வெளிப்படுத்தி பின்னர் எதிர்த்து வாக்களித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டம் குறித்த விடயத்திலேயே ஒன்றுபட்டு ஒரு முடிவை எடுக்க முடியாத ஒரு கூட்டே, கடந்த வாரம் ஒன்றிணைந்து ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்தி, டலஸ் அழகப்பெருமவை மாற்று ஜனாதிபதியாகக் கொண்டுவர தலைகீழாக நின்று முயற்சித்துப் பார்த்தது.

இந்தக் கூட்டுக் கட்சிகளுடன் சேர்ந்துதான் ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்தும் எத்தனத்துக்கு ஒப்பந்தம் எழுதி, ஆதரவளிக்க ஒற்றைக் காலில் நின்று பிடிவாதம் பிடித்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

வண. அத்துரலியரத்தின தேரர், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்ற இனவாதிகள் சேர்ந்திருக்கும் கூட்டின் தரப்பை அதிகாரத்துக்கு கொண்டு வருவதன் மூலம் தமிழர் தரப்புக்கு ஏதேனும்பயன்கிட்டும்என்றுதிட்டமிட்டதமிழ்கூட்டமைப்பின் தலைமை ஏளனத்திற்கும் நகைப்பிற்கும் உரியதாகியிருக்கின்றது. அந்த இனவாதிகளின் ஒற்றைக் கொள்கையே தமிழினத்திற்கு ஏதும் நியாயம் தனித்துவமாகக் கிடைத்து விடக்கூடாது, கிடைக்க அனுமதிக்கவே கூடாது என்பதுதான். அது எல்லோருக்கும் வெளிப் படையாக தெரிந்த சங்கதி.

அப்படி ஒரு தரப்புடன் கூட்டுச்சேர்ந்தமை எவ்வளவு தூரம்பொருத்தமற்றது என்பதை இப்போது அவசரகாலச் சட்ட விதிகளை ஆதரிக்கும் அல்லது எதிர்க்காமல் விடும் அத்தரப்பின் நடவடிக்கை மூலம் கூட்டமைப்புத் தலைமை உணரக்கூடியதாக இருந்திருக்கும் என நம்பலாம்.

கொள்கை இல்லாத ஒரு சாம்பார் கூட்டணியில் டலஸ் அழகப்பெரும நின்றமையால்தான் ஜனாதிபதி தெரிவில் அவருக்கு இவ்வளவு பின்னடைவு. அது நம்மவர்களுக்கும் – தமிழ் தலைவர்களுக்கும் – புரிந்தால் சரி.

## நியாயமான காரணமின்றி விமானத்தில் பிரஜையொருவரை கைதுசெய்ததன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை

### ஹெக்டர் அப்புஹாமி காட்டம்



நியாயமான காரணம் எதுவுமின்றி விமானத்தில் பிரஜையொருவர் பலவந்தமாக கைது செய்யப்பட்டதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையும்.

இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை மீதுள்ள அதிருப்தியை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அவசர கால சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு, கைதுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அடிப்படை காரணம் எதுவுமின்றி விமானத்தில் செல்லத் தயாராக இருந்த நபரை பலவந்தமாகக் கைது செய்துள்ளமை அடிப்படை மனித உரிமை மீறலாகும். இவ்வாறான செயற்பாடுகளால் இலங்கை மீது வெளிநாடுகளுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தி அதிகரித்துள்ளது. காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கப்பட்டதை விட , இந்த செயற்பாடு மூலம் ஏற்படவிருக்கும் பின் விளைவுகள் பாரதூரமானவையாகும்.

தற்போது மக்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலேயே எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. வரையறுக்கப்பட்டளவில் எரிபொருளை விநியோகித்து மக்களின் அன்றாட செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கைகளையே அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய தேவை இல்லை என்ற அடிப்படையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

நாட்டில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் மேலும் தாமதமடையும். அதற்கமைய ஓகஸ்ட் 15 ஆம் திகதியின் பின்னர் எரிபொருள் இறக்குமதியில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

நாட்டில் நிலவும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு விரைவில் பொதுத் தேர்தலை நடத்துவதாகும். தற்போதுள்ள நிலைமையில் , இந்த அரசாங்கத்தின் தலைமைத்துவத்தில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாது.

அதில் எம்மால் பங்கேற்கவும் முடியாது. எனவே தான் தேர்தலை துரிதமாக நடத்துமாறு வலியுறுத்துகின்றோம். – என்றார்.

## வெலிக்கடைச் சிறைப்படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு மன்னாரில்!



வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு தினமான ‘தமிழ் தேசிய வீரர்கள் தினம்’ மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) காலை 11 மணியளவில் நினைவு கூரப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி,முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உருவப்படத்துக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வினோநோகராதலிங்கம் , கட்சியின் உறுப்பினர்கள், உள்ளிட்டோர் கலந்து கொண்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்திய மை குறிப்பிடத்தக்கது.

## திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கியோருக்கு மாத்திரமே கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும்!

திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கியோருக்கு மாத்திரமே நேற்று (புதன்கிழமை) முதல் கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மீளவும் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அவசரமாக வெளிநாடு செல்லவுள்ளோருக்கான விசேட ஒருநாள் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அவசர தேவையின் நிமித்தம் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதாயின் தமது தகவல்களை 070 63 11 711 என்ற வட்ஸ் அப் இலக்கத்துக்கு அனுப்பும் பட்சத்தில், கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கான திகதியை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



## கொரோனா ஊரடங்கில் குடும்பத்திற்காக விமானம் தயாரிப்பு லண்டனில் வசிக்கும் இந்திய வம்சாவளி இளைஞர் அசத்தல்

உலகையே வீட்டிற்குள் முடக்கிப்போட்ட கொரோனா பேரிடர்காலத்தில் குடும்பத்திற்கென பிரத்யேகமாக சிறிய ரக விமானம் ஒன்றை தயாரித்து அசத்தியுள்ளார் லண்டனில் வாழும் இந்திய வம்சாவளி இளைஞர். தாம் தயாரித்த விமானத்தில் மனைவி, மகள்களுடன் தற்போது ஐரோப்பாவில் உற்சாகமாக வலம் வருகிறார். கொரோனா பேரிடர் காலத்தில் சுமார் ஈராண்டுகள் வீட்டிற்குள் முடங்கிய பலரும் யூடியூப் பார்த்து புது புது உணவுகளை தயாரித்து ருசித்து மகிழ்ந்த போது லண்டனில் வசித்த இந்திய வம்சாவளியை சேர்ந்த அசோக் என்பவர் அதே யூடியூப் உதவியுடன் குடும்பத்திற்காக பிரத்யேகமாக விமானம் ஒன்றை தயாரித்துள்ளார். கேரள மாநிலம் ஆலப்புழாவை பூர்விகமாக கொண்ட அவர் பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான போர்டில் பொறியியலாளராக பணிபுரிகிறார். கொரோனா ஊரடங்கில் ஆலைகள் முடங்கியதால் கிடைத்த கால அவகாசத்தில் வீட்டிலிருந்த படியே விமான தயாரிப்பு கையேடுகள், யூடியூப் விடியோக்கள் ஆகியவற்றின் கைக்கொண்டு சிறிய ரக விமானத்தையே அவர் உருவாக்கியுள்ளார்.

பல்வேறு கட்ட தரப்பரிசோதனைகளுக்கு பிறகு முறையான அனுமதி கிடைத்ததும் தாமே தயாரித்த சிறிய ரக விமானத்தில் மனைவி, இரண்டு மகள்களுடன் ஐரோப்பாவை வலம் வர தொடங்கிவிட்டார் பொறியியலாளர் அசோக். இதுவரை, ஜேர்மனி, ஆஸ்திரிய, செக்குடியரசு ஆகிய நாடுகளை அவர் வலம் வந்துவிட்டார். ஒன்றரையாண்டு கால உழைப்பை கொட்டி சுமார் 1.8 கோடி ரூபா செலவில் குடும்பத்திற்காக தனி விமானத்தையே அசோக் உருவாக்கியுள்ளார். தனிப்பட்ட பயணத்திற்கென ஏற்கனவே சிறிய ரக விமானங்கள் இருக்க ஏன் இந்த முயற்சி என்று கேட்டபோது அவை பெரும்பாலும் இரண்டு இருக்கைகள் கொண்டவை என்பதால் மனைவி, இரண்டு மகள்களுடன் ஒன்றாக பயணிப்பதற்காகவே நான்கு இருக்கைகள் கொண்ட விமானத்தை வடிவமைத்தேன் என கூறுகிறார் அசோக். இன்று தன் விருப்பப்படி தாமே உருவாக்கிய விமானத்தில் குடும்பத்துடன் ஐரோப்பாவை உற்சாகமாக வலம் வருகிறார் அசோக்.

## 1,000 விமான சேவையை ரத்து செய்தது லுப்தான்சா




ஜேர்மனியில் செயல்படும் லுப்தான்சா விமான நிறுவனத்தின் சரக்கு கையாளுதல், தொழில்நுட்பம் மற்றும் கார்கோ பிரிவை சேர்ந்த 20,000 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், பிராங்க்பர்ட், முனிச், பெர்லின் வழித்தடத்தில் 1,000க்கும் மேற்பட்ட விமான சேவை ரத்து செய்யப்பட்டது. 47 இணைப்பு விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டன. இதனால் 1.34 லட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டனர்.



## எரிவாயு விநியோகத்தை குறைத்துக் கொண்டது ரஷ்யா

ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் எரிவாயு அளவில் 20 சதவீதத்தை ரஷ்யா குறைத்து உள்ளது. ரஷ்யாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு பெரிய குழாய் வழியாக (நார்ட் ஸ்ட்ரீம் 1) இயற்கை எரிவாயு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதை ரஷ்யாவின் எரிசக்தி நிறுவனமான காஸ்ப்ரோம் நிறுவனம் செய்து வருகிறது.

உக்ரைன்-ரஷ்யாவுக்கு இடையேயான போரால், ரஷ்யா மீது பல்வேறு பொருளாதார தடைகள் விதித்த ஐரோப்பிய நாடுகள், ரஷ்யாவிடம் இருந்து எரிவாயு வாங்குவதை மட்டும் நிறுத்தவில்லை.

இந்நிலையில் ரஷ்யாவின் காஸ்ப்ரோம் நிறுவனம், ஐரோப்பாவுக்கு குழாய் மூலம் அனுப்பப்படும் எரிவாயுவின் அளவை 20 சதவீதத்தை குறைத்துள்ளது. தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக எரிவாயு அளவு குறைக்கப்பட்டதாக ரஷ்யா விளக்கமளித்துள்ளது. ஆனால், போருக்கு மத்தியில் எரிவாயு விலையை உயர்த்துவதற்கான அரசியல் நடவடிக்கை என்று ஜேர்மனி குற்றம்சாட்டி உள்ளது. இந்த எரிவாயு குறைப்பை உறுதிப்படுத்திய ஜேர்மனியின் இணையதள ஆணைய தலைவரான கிளாஸ் முல்லர், ‘எரிவாயு இப்போது ரஷ்ய வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதி மற்றும் ரஷ்ய போர் உத்தியின் ஒரு பகுதியாகும்’ என்றார். ரஷ்யாவின் எரிவாயு குறைப்பால் 27 நாடுகள் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



## உக்ரைன் அதிபருக்கு விருது வழங்கி கௌரவித்தார் போரிஸ் ஜான்சன்

உக்ரைன் மீதான ரஷ்யா போரில் இங்கிலாந்து தொடர்ந்து உக்ரைனுக்கு ஆதரவாக இருந்து வருகிறது. உக்ரைனுக்கு ராணுவ, நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளை இங்கிலாந்து வழங்கி வருகிறது. போருக்கு மத்தியில் கடந்த ஏப்ரல் மாதம் உக்ரைனுக்கு சென்ற இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ் கியை நேரில் சந்தித்து, இங்கிலாந்து எப்போதும் உக்ரைனுக்கு துணை நிற்கும் என உறுதியளித் தார். இந்த நிலையில் இங்கிலாந்தின் உயரிய விருதான சர் வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருதை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கிக்கு வழங்கி போரிஸ் ஜான்சன் கௌரவித்துள்ளார். இது குறித்து போரிஸ் ஜான்சன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், இன்று வின்ஸ்டன் சர்ச்சில் தலை மைத்துவ விருதை எனது நண்பர் ஜெலன்ஸ்கிக்கு வழங்கியது பெருமையாக உள்ளது. ஜெலன்ஸ் கியின் தைரியம், எதிர்ப்பாற்றல் மற்றும் கண்ணியம் என அவரின் அனைத்து குணங்களும் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களை அசைத்து, உலகளாவிய ஒற்றுமை அலைகளை கிளறிவிட்டன என குறிப்பிட்டுள்ளார்.



## போப் ஆண்டவருக்கு கிரீடம் அணிவித்த பழங்குடி மக்கள்

உலக கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் தலைவர், போப் பிரான்சிஸ் ஆவார். அவர் கனடா நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு 19ம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபைகளால் நடத்தப்பட்ட உறைவிட பள்ளிகளில் தங்கிப்படித்து வந்த பழங்குடியின மாணவர்கள், உடல்ரீதியில், பாலியல்ரீதியில் துன்புறுத்தப்பட்டது குறித்து அவர் தனது வேதனையை வெளிப்படுத்தியதோடு மட்டுமின்றி, அதற்காக அவர் மனதார மன்னிப்பு கேட்டுக்கொண்டார். அங்கு அல்பெர்டா மாகாணத்தில் உள்ள மாஸ்க்வாசிஸ் நகரத்தில் 19ம் நூற்றாண்டில் தேவாலய பள்ளியாக விளங்கிய எர்மெனிஸ்கின் உறைவிட பள்ளிக்கு சென்றிருந்தபோதுதான், போப் ஆண்டவர் இந்த மன்னிப்பை கேட்டார்.

அதைத் தொடர்ந்து அங்கு அவருக்கு ஒரு மாறுபட்ட அனுபவம் காத்திருந்தது. அங்கு அவருக்கு பழங்குடியின மக்களின் பாரம்பரிய கிரீடத்தை அணிவித்தனர். அந்த கிரீடத்தில் வெண்மையான வெள்ளை சிறகுகள், வண்ணமயமான மணிகள் இடம் பெற்றிருந்தன. அந்த காலத்தில் கத்தோலிக்க திருச்சபை உறைவிட பள்ளியில் துன்புறுத்தல்களுக்கு மத்தியில் உயிர் தப்பிய சீப் வில்டன் லிட்டில்சைல்ட் என்பவர் அந்த கிரீடத்தை போப் ஆண்டவருக்கு அணிவித்தபோது அங்கிருந்த பழங்குடியின மக்கள் அனைவரும் கைதட்டி ஆர்ப்பரித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது தனக்கு பாரம்பரிய கிரீடம் அணிவித்தவரின் கைகளில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இந்த கிரீடம், பூர்வீக அமெரிக்க படைத்தளபதிகள், போர் வீரர்கள் அணியும் மரியாதையின் சின்னமாக விளங்கியது, வரலாற்றுச்சிறப்பு மிக்கது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்தில் இதுவரை குரங்கு அம்மை பாதிப்பில்லை நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் தகவல்



தமிழகத்தில் இதுவரை குரங்கு அம்மை பாதிப்பு இல்லை என்று தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு குரங்கு அம்மைக்கான அறிகுறி உள்ளதா என தீவிரமாக பரிசோதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை குரங்கு அம்மைக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்களில் தீவிர கண்காணிப்பு நடத்தப்படுகிறது.

தமிழகத்தில் நடைபெறுகின்ற செஸ் ஒலிம்பியாட் தொடருக்காக இதுவரை வந்த எந்த பங்கேற் பாளர்களுக்கும் குரங்கு அம்மை அறிகுறிகள் தென்படவில்லை. அவ்வாறு செஸ் ஒலிம்பியாட் வீரர்களுக்கு குரங்கம்மை பாதிப்பு கண்டறியப்பட்டால் தனிமைப்படுத்தப்படுவர்.

சென்னையில் குரங்கு அம்மை ஆய்வகம் அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. கிண்டி கிங் இன்ஸ்டியூட்டில் குரங்கு அம்மை பரிசோதனை மையம் அமைக்கப்பட்டுள்ளது, என்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

# எடப்பாடி பழனிசாமி மீதான வழக்கு ஒகஸ்ட் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு



தமிழகத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நெடுஞ்சாலைப்பணிகளைமேற் கொள்ள நடந்த டெண்டர் ஒதுக் கீட்டில் 4,800 கோடி ரூபா அளவுக்கு முறைகேடு நடந்துள் ளதாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக்கோரி தி.மு.க. சார்பில் ஆர்.எஸ்.பாரதி சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை கடந்த 2018 ஆம் ஆண்டு விசாரித்த உயர் நீதிமன்றம், வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தர விட்டது. இந்த உத்தரவை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறை யீடு செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி, சி.பி.ஐ.யின் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.

கடந்த 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள இந்த வழக்கை விசாரிக்கக் கோரி தலைமை நீதிபதி என்.வி. ரமணா தலைமையிலான அமர்வு முன்பாக, தமிழ்நாடு ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையம்நேற்று முன்தினம் முறையிட்டது. இதனையடுத்து இந்த வழக்கு மீதான விசா ரணை என்.வி.ரமணா அமர்வு முன்பு நடைபெற்றுள்ளது.

அப்போது எடப்பாடி பழனி சாமி தரப்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பாலாஜி ஸ்ரீநிவா சன், சுப்ரீம் கோர்ட்டில் தமிழ் நாடு ஊழல் தடுப்பு கண் காணிப்பு ஆணையம் திடீரென முறையிட்டது குறித்த தகவலை தங்கள் தரப்புக்கு தெரிவிக்க வில்லை. இது முறையல்ல, என புகார் தெரிவித்தார். ஆர். எஸ்.பாரதி சார்பில் ஆஜரான வக்கீல்கள் என்.ஆர். இளங்கோ, விவேக் சிங் ஆகி யோர், தமிழக அரசின் கூடுதல் தலைமை வக்கீலாக அமித் ஆனந்த் திவாரி நியமிக்கப்பட் டுள்ளதால், ஆர்.எஸ்.பாரதி சார்பில் ஆஜராக முடியாது. எனவே வேறொரு வக்கீலை நியமிக்க வேண்டி உள்ளது, என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதி கள் வழக்கு விசாரணையை ஒகஸ்ட் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். இதற்கு மேலும், இனி வழக்கு விசாரணையை ஒத்திவைக்கக் கோரும் மனுக் கள் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.



# அப்துல் கலாமின் 7 ஆம் ஆண்டு நினைவு நினைவிடத்தில் பலரும் ஒன்றுகூடி அஞ்சலி

இந்திய முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாமின் ஏழாவது நினைவு நாள் நேற்று அனுஷ்ரிக்கப்பட்டது. இதையொட்டி ராமேஸ்வரம் பேய்க்கரும்பில் உள்ள அவரது நினைவிடக் கட்டடம் மலர்களாலும் வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நினைவு நாளான இன்று அவர் நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் மலர் போர்வைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அங்கு சென்ற அப்துல்கலாம் குடும்பத்தினர் நினைவிடத்தில் சிறப்புத் தொழுகை நடத்தி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில் அப்துல் கலாமின் பேரன்களான சேக்ச லீம், சேக்தாவூத், அண்ணன் மகள் நசிமா மரைக்காயர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட நிர்வாகம் சார்பில் டாக்டர் அப்துல்கலா முடைய சமாதியில் மலர் தூவி மரியாதை செலுத் தப்பட்டது.

அதன்பின் பாடசாலை, கல்லூரி மாணவர்கள், அரசியல் கட்சியினர், பிரமுகர்கள் போன்றோரும் மரியாதை செலுத்தியிருந்தனர்.



# பொதுமக்களோடு தொலைபேசியில் நேரடியாக உரையாடினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தமிழகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவு, உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு, உங்கள் தொகுதி யில் முதலமைச்சர் துறை ஆகிய அலுவலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது.

இத்துறையின் கீழ் முதலமைச்சர் அழைப்பு மையமும் செயல்படும் என்றும், 1100 என்ற எண்ணின் மூலம் பொதுமக்கள் அனைத்து விதமான புகார்களையும் தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. அதன்படி, முதலமைச் சர் அழைப்பு மையம் சென்னை சோழிங்கநல்லூரை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டுவருகிறது. இந்த அழைப்புமையத்துக்குதமிழகமுதலமைச் சர் மு.க.ஸ்டாலின் திடீரென வருகை புரிந்துள்ளார்.

அவருடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், 'முதல்வரின் முகவரி' துறையின் சிறப்பு அதிகாரி ஷில்பாபிரபாகர்சதீஷ் உள்ளிட்டோரும் இணைந்திருந்தனர். இந்த மையத்தின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மையத்தில் புகார்கள் எவ்வாறு பதிவு செய்யப்படுகின்றன?, துறைகள் வாரியாக அந்த புகார்கள் எப்படி பிரித்து அனுப்பப்படுகின்றன? தீர்வுகாணப்பட்டபுகார்கள், நிலுவையில் உள்ள புகார்கள், அதற்கான காரணங்கள் என மையத்தின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சருக்கு ஷில்பா பிரபாகர் சதீஷ் விளக்கி கூறினார்.

இதற்கிடையில் அழைப்பு மையத்தில் புகார்களைப் பெற்றுக்கொண்டிருந்த ஒரு பெண் பணியாளரிடம் அவரது பணி குறித்து கேட்டறிந்த ஸ்டாலின், பின்னர் புகார் அளிக்கும் பொதுமக்களுடன் தொலைபேசியில் தானே பேசி புகார்களையும் பெற்றுக்கொண்டார்.

தீர்வு கிடைக்காமல் இருக்கும் புகார்களின் கோப்புகளைப் பெற்றுக் கொண்ட அவர், சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகளை உடனடியாகத் தொடர்பு கொண்டு, புகார்களுக்கு தீர்வு காணப் படாமல் இருப்பதற்கான காரணங்களை விசாரித்ததோடு, விரைந்து நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டுள்ளார். சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு தனது பாராட்டுகளையும் அவர் தெரிவித்தார்.



# புதிய விமான நிலையத்தை அமைப்பது; மத்திய அமைச்சருடன் தென்னரசு ஆலோசனை

தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு டெல்லியில் நேற்று இந்திய மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியாவை சந்தித்து தமிழகத்தில் உள்ள விமான நிலையங்களின் மேம்பாட்டுக்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து பின்னர் தகவல் வழங்கிய அமைச்சர் தங்கம் தென்னரசு, பல்வேறு விடயங்கள் குறித்து விவாதித் ததாகவும், சென்னையில் புதிதாக பசுமை விமான நிலையம் அமைப்பதற்கான இடம் குறித்து பிரதானமாக ஆலோசித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள பன்னூர் மற்றும் பரந்தூர் ஆகிய இடங்களில் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனவும், அந்த இரு இடங்களுக்குமான அனுமதி பெறுவதுபற்றி மத்திய அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தாகவும் தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.

# மாமாங்கேஸ்வரர் தேரோட்டம்





(க.கிருபாகரன்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட் டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஒன்பதாவது நாளான நேற்று தேவார பாராயணம் மற்றும் மேள வாத்தியங்கள் முழங்க, அடியவர்கள் வடம் பிடித்து இழுக்க, மாமாங்கேஸ்வரர் சித்திரத் தேரிலேறி, ஆலய வளாகத்தைச் சுற்றி வலம் வந்தார். இத்தேரோட்டப் பெருவிழாவில் நாட்டின்பல்வேறுபிரதேசங்களையும்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர். மாமாங்கேஸ்வரர் ஆலய உற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

# கடலலையில் இழுத்து செல்லப்பட்ட மாணவன் சடலமாக மீட்கப்பட்டார்

## பெரிய நீலாவணைப் பகுதியில் சம்பவம்





(பாறுக் ஷிஹான்)

கடலலையில் சிக்கி இழுத்து செல்லப்பட்டு காணாமல் போன பாடசாலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை 3.30 மணியளவில் அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள கடற்கரைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

3 மாணவர்கள் பெரியதம்பிரான் ஆலய உற்சவ இறுதி நாளான அன்று தீர்த்தம் உற்சவத்தில் நீராடச் சென்ற போது கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டனர்.

இந்நிலையில் இரு மாணவர்கள் உயிர் தப்பிய நிலையில் கரை சேர்ந்தனர். மற்றுமொரு மாணவன் கடலுக்குள் இழுத்து செல்லப்பட்ட நிலையில் மாயமானார். இவ்வாறு காணாமல் சென்ற பெரிய நீலாவணை – 1 பகுதியைச் சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க இராசநாயகம் சனுஜன் என்ற மாணவனின் சடலம் நேற்றுப் புதன்கிழமை மாலை கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மரண விசாரணைக்காக எடுத்து செல்லப்பட்டுள்ளது.

கடல் வழமைக்கு மாறாக கொந்தளிப்பாக காணப்பட்ட நிலையில் அதனையும் பொருட்படுத்தாது கடல் நீச்சலில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் எனக் கூறப்பட்டது.

மாணவனின் சடலம் உடல்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# மட்டு. இலுப்படிச்சேனைக் காட்டில் உருக்குலைந்த நிலையில் சடலம்

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள இலுப்படிச்சேனைக் காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம், கடந்த திங்கள் இரவு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்கு விறகு வெட்டச் சென்றவர்கள், அங்கு சடலம் ஒன்று இருப்பதாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையையடுத்து, சடலத்தை பொலிஸார் மீட்டு, பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் 10 நாள்களுக்கு முன் இந்நபர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தெரிவித்த கரடியனாறு பொலிஸார், சடலம் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# ஆடி அமாவாசை திருவிழா இறுவெட்டு மாமாங்கேஸ்வர ஆலயத்தில் வெளியீடு

மட்டக்களப்பு, அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமான் மேல் பாடப்பட்ட ஆடி அமாவாசை திருவிழா இறுவெட்டு வெளியீடு நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்றது.

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற மட்டக்களப்பு, அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் மீது மட்டக்ககளப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாக கொண்ட உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தனின் பாடல் வரிகளுக்கு தமிழிசை வேங்கை ரீ.எல்.மகராஜனினால் இசையமைத்துப் பாடப்பட்ட ஆடி அமாவாசை திருவிழா இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு இறுவெட்டை வெளியீட்டு வைத்தார்.

அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் ஆலய வண்ணக்கர் தி.விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதம குரு ஆதி சௌந்தராஜ குருக்களின் ஆசியுரையுடன் இறுவெட்டு வெளியீட்டு வைக்கப்பட்டது. வெளியீட்டு நிகழ்வில் ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர், முன்னாள் வண்ணக்கர்கள், அண்மித்த கிராமங்களின் ஆலய பரிபாலன சபையினர், மட்டக்களப்பு தமிழ் சங்க பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நாட்டை அராஜக நிலைக்கு கொண்டுசெல்ல போராட்டக்காரர்களுக்கு இடமளிக்கமுடியாது

## விமல் வீரவன்ஸ ஆக்ரோஷம்



பொருளாதார ரீதியில் நாட்டை முன்னேற்ற போராட வேண்டிய நேரத்தில் நாட்டை அராஜக நிலைக்கு கொண்டுசெல்ல இடமளிக்க முடியாது.

அதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோ ஹோம் என தெரிவிக்காமல் யாரை ஜனாதிபதியாக்க வேண்டும் என தெரிவித்தால், அவரை கொண்டு வருவோம் என எதிர்க்கட்சியில் சுயாதீனமாக இயங்கும் கட்சிகளை சேர்ந்த தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டத்துக்கான நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது நாங்கள் உட்பட டலஸ் அழகப்பெருமவுக்கே எதிர்க்கட்சிகள் வாக்களித்தன.

ஆனால் இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவே தெரிவாகினார். ஆனால் டலஸ் அழகப்பெரும பதவியேற்றிருந்தால் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியுமாக இருந்திருக்கும். அந்த நோக்கத்திலே நாங்கள் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்க தீர்மானித்தோம்.

இந்த நாட்டில் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளால் பெருமளவான மக்கள் கொழும்புக்கு வந்த நிலையில், ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிச் சென்றார்.

அப்போது கோட்டா கோ ஹோம் போராட்டமாக நடந்தது. அதனுடன் முடிவடைந்துவிடும் என்று நினைத்த போதும், அடுத்த 9 ஆம் திகதி இன்னுமொருவரை விரட்ட நடவடிக்கையெடுக்கப்படவுள்ளதாக சரத் பொன்சேகா தெரிவிக்கின்றார்.

இதன்பின்னர் தினேஷ் கோ ஹோம் என்ற போராட்டமும் தொடங்கும். அப்படியே கூறிக்கொண்டிருந்தால் யாரை கொண்டு வரப் போகின்றீர்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கோ ஹோம் எனத் தெரிவிக்காமல் யாரை ஜனாதிபதியாக்கவேண்டும் எனத் தெரிவித்தால், அவரை கொண்டு வருவோம். இப்படியே சென்றால் எப்போது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் போகின்றோம். இருக்கும் ஆட்சி தொடர்பாக எங்களிடையே விமர்சனங்கள் உள்ளன. அதனை வேறு வகையில் தீர்த்துக்கொள்ள முடியும்.

ஆனால் இதனை லிபியா அல்லது ஆபிரிக்காவின் நாடுகள் போன்று காட்டுவதா போராட்டத்தின் நோக்கம். லட்சக் கணக்கான மக்களின் நியாயமான கோரிக்கைகளை நாங்கள் நிராகரிக்கவில்லை.

ஆனால் இப்போது இருப்பது அரசை வீழ்ச்சியடைய செய்யும் முயற்சியே முன்னெடுக்கப்படுகின்றது. எனக்கு ரணிலிடம் அமைச்சுப் பதவி அவசியமில்லை. நாங்கள் பொருளாதார ரீதியில் மேலெழுந்து வரும் போது, எமக்கென அரசு இருக்க வேண்டும்.

மேலும் போராட்டக்காரர்கள் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, பிரதமர் அலுவலகத்தைக் கைப்பற்றியமை அமைதிப் போராட்டமா? நாடாளுமன்றத்துக்கும் வந்தனர்.

சரியான நேரத்தில் பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கைகளை எடுத்திருக்காவிட்டால் என்னவாகியிருக்கும். ஐக்கிய நாடுகள் அமைதிப் படையிடம் கேளுங்கள் உலகிலேயே சிறந்த இராணுவம் இங்கேயே உள்ளது.

அன்று நாடாளுமன்றத்தைக் கைப்பற்றியிருந்தால் அரசு என்ற ஒன்று இருந்திருக்குமா?. எமது பொருளாதார நெருக்கடியை அரசை வீழ்த்தும் முயற்சிக்காக பயன்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு இடமளிக்க முடியாது.

சிலர் ஐ.நா. அலுவலகம் செல்கின்றனர். சிறிதரன் போன்றோர் வடக்கிற்கு வெளிநாட்டு இராணுவத்தை கேட்டுச் செல்கின்றனர். இப்படி நடந்தால் வடக்கில் இராணுவத்தை நீக்க நடவடிக்கை எடுக்கலாம்.

அடுத்ததாக கூரகலயிலும் நடவடிக்கை எடுக்கலாம். இப்படி நாட்டை சீரழிவுக்கு கொண்டு செல்ல இடமளிக்கக் கூடாது. எந்தக் கட்டத்திலும் அரசை வீழ்ச்சியடைய இடமளிக்க முடியாது.

அதனால் அராஜகத்துக்கு இடமளித்தால் வடக்கு, கிழக்கு என்று பிரிந்துசெல்லும் நிலைமையும் ஏற்படும். இதனால் நாட்டை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புதரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.






# வவுனியா மாவட்ட வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா மாவட்ட வைத்தியசாலை சுகாதார பணியாளர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார பணியாளர்களுக்கென விசேட தினத்தில் தனியொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்க வேண்டும் எனக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் வைத்தியசாலை பணியாளர்களுக்காக விசேட தினத்தில் தனியொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும் இந்தச் செயற்பாடு கடந்த சில நாள்களாக நிறுத்தப்பட்டதுடன், பொதுமக்களின் வரிசையின் ஊடாகவே எரிபொருளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமது கடமைக்கு உரிய நேரத்துக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் இந்நிலை மாற்றப்பட்டு தமக்கென தனியான ஒரு தினத்தில் எரிபொருள் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுவதுடன் இந்நிலை தொடருமாயின் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த வலி நிவாரண மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன!

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த வலி நிவாரண மாத்திரைகளைத் தமிழக கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு வலி நிவாரண மாத்திரைகள் கடத்தப்படவுள்ளன என கியூ பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கியூ பிரிவு பொலிஸார் திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பதிவெண் இல்லாமல் சந்தேகத்துக்கு இடமான முறையில் தரித்து நின்ற நாட்டு படகை சோதனை செய்தனர்.

அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக சுமார் 443 அட்டைகளில் 4 ஆயிரத்து 430 வலி நிவாரண மாத்திரைகள் மீட்கப்பட்டன.

கியூ பிரிவு பொலிஸாரால் மீட்கப்பட்ட வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் நாட்டுபடகு என்பவற்றை சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# வன்னி பிராந்திய மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல்!

வன்னி பிராந்தியத்தில் உள்ள மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகளை உள்ளடக்கி மாவட்ட ரீதியாக காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட ஒன்றுகூடல் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை மாலை வவுனியா அமைதியம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மேற்படி ஒன்று கூடலில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியாக இடம் பெறும் காணி அபகரிப்பு,காற்றாலை மின் செயற்திட்டம் ,சட்டவிரோத மணல் அகழ்வு, பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அதே நேரம் இந்த ஒன்று கூடலில் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் தயார்ப்படுத்தல் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தெளிவுபடுத்தலும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள்,மெசிடோ நிறுவன அதிகாரிகள்,ஊடகவியளாலர்கள் ,ட்ரான்ஸ்பெரன்ஸி இன்ர நேஷனல் வடமாகாண இணைப்பாளர் என பலரும் கலந்து கொண்டனர்.

# வெலிக்கடை சிறைப் படுகொலை; மட்டக்களப்பில் நினைவு அஞ்சலி







வெலிக்கடை சிறைப் படுகொலையின் 39ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்றைய தினம் மட்டக்களப்பிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத்தில் நடைபெற்றது.

ரெலோவின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ரெலோவின் உப தலைவர் இந்திரகுமார் பிரசன்னா, மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைத் தவிசாளர், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) இளைஞர் அணி உப தலைவரும் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபை உறுப்பினருமான இரத்தினையா வேணுராஜ், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் உறுப்பி னர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2022இல் வெளியிடப்பெற்றது.